# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருட முதலாம் அரையாண்டிற்கான சிறப்புக்கலைமாணித் தேர்வு

## 2013 / 2014

## EDS 2133 -கல்வியில் தத்துவ அடிப்படைகள் (Philosophical Foundations of Education)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக

---

## பகுதி I

01. அ."தத்துவமென்பது யதார்த்தத்தின் மறுவடிவம் எனப்படுகின்றது." அந்தவகையில் தத்துவமென்றால் என்னவென்பதனை உமது பார்வையில் விளக்கி தத்துவத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பரப்புக்கள் தொடர்பாகச் சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

ஆ."ஒவ்வொரு சமயமும் வெவ்வேறுவிதமான கல்வி தொடர்பான தத்துவக் கருத்துக்களினை வலியுறுத்துகின்றது." இவ்வாறான தத்துவக் கருத்துக்கள் இன்றைய கல்வி உலகோடு பொருத்தப்பாடுடையதாகக் காணப்படுகின்றதா? என்பதனைப் பொருத்தமான ஆதாரங்கள் நான்கு காட்டி விளக்குக.

(08 புள்ளிகள்)

02. அ.இலங்கையின் கல்வி இலக்குகளாகக் கொள்ளப்படும், தேசியகல்வி ஆணைக் குழுவின் முதலாம் அறிக்கையில் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தேர்ச்சிகளைப் பட்டியற்படுத்தி, இன்றைய கல்விக் கொள்கைகள் அவை மூலம் அடையப்படுகின்றனவா? என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ.கல்வித் தத்துவங்களினை உருவாக்குதில், செல்வாக்குச் செலுத்துகின்ற வாதங்களில் இயற்கைவாதம் (Idealism) கூறும் முக்கிய கருத்துக்களினை எவ்வாறு பயன்படுத்துவீர் என்பதனை எடுத்துக்காட்டுக்களின் துணைகொண்டு பரிசீலனைசெய்க. (08 புள்ளிகள்)

03. அ.இன்று ஆரம்பக்கல்வி தொடர்பாக அதிக முக்கியத்துவம் எடுக்கப்படுகின்றது. அந்தவகையில் இலங்கைக் கல்விக் கொள்கைகள் ஆரம்பக்கல்வி தொடர்பாக முன்வைத்த கோட்பாடுகளைக் கூறி மேலதிகமாக எவற்றினை அதில் உள்நுழைக்க வேண்டும் என்பதனை உமது கருத்துக்கள் சார்பாகச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ.இன்றைய நிலையில் பாடசாலைக் கல்விமட்டும் போதுமானது என்பதனை ஏற்றுக் கொள்ளமுடியாது."அந்தவகையில் 'முறைசாராக்கல்வியும்' (non-formal) இன்று வலுப்பெற்றுள்ளது. இம்முறைசாராக் (non-formal) கல்வியின் செல்வாக்குகள் முறைசார் கல்வியில் ஏற்படுத்தும் தாக்கத்தினை விமர்சனரீதியாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

## பகுதி II

04. அ.பாடசாலைக் கலைத்திட்ட உருவாக்கத்தின்போது பாடசாலைசார் அனைத்து விடயங்களு உள்ளடக்கப்படும் போதிலும் விழுமியங்களின் செல்வாக்குகளை அதிகம் இணைத்துக் கொள் வேண்டும் எனக் கல்வி அமைச்சு இன்று எதிர்பார்க்கின்றது. இதற்கான காரணங்கள் எவையா இருக்கலாம் என்பதனை ஆதாரம் காட்டி விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ.பாடசாலை நிர்வாகமானது சிறப்பான முறையில் இயங்குவதற்கு ஆசிரியர்கள் தம் ஒழுக் விதிமுறைகளை உரிய முறையில் உணர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற் ஆசிரியர் - ஆசிரியர் தொடர்பு, ஆசிரியர் - அலுவலகத் தொடர்பு என்பனவற்றினை எவ்வா வினைத்திறன் கொண்டதாக அமைக்கலாம் என்பதனை புதிய கொள்கை உருவாக்கத்தோ தொடர்படுத்திப் பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

05. அ.சமூகமயமாக்கல் என்றால் என்ன? என்பதனை விளக்கி, கல்வி கற்க ஆரம்பிக்கு பிள்ளையொன்று சமூகமயமாக்கலின் முதற்கட்டமாகக் காணப்படும் குடும்பத்தின் மூல எவ்வாறான இசைவாக்கங்களினைப் பெறமுடியும்? என்பதனை நடத்தை உருவாக்கத்தோ தொடர்புபடுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ.இன்றைய நிலையில் சமூகமயமாக்கலின் மையநிலையமாக எதிர்பார்க்கப்படுவ பாடசாலையாகும். எனவே சமூகமயமாக்கலுக்கான பங்களிப்பினை ஒவ்வொரு பாடசாலையு எவ்வகையில் வழங்குகின்றதென்பதனை நீர் மேற்கொண்ட கள ஆய்வினை (Field work மையமாகக் கொண்டு பரிசீலனைசெய்க? (14 புள்ளிகள்)

06. அ.கல்வித் தேவைகள் இன்று மாற்றப்பட்டுக்கொண்டே செல்கின்றன. யாரும் எப்போதும் கல் கற்கலாம் எனும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இதன் அடிப்படையில் திறந்தகல் தொலைக்கல்வி என்பன சமூகத்தில் எத்தகு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன என்பதை விமர்சனரீதியாக ஆராய்க. (2x 5=10 புள்ளிகள்

ஆ.சமூகத்தின் தேவைகளை மையமாகக்கொண்டு கல்வி மாற்றியமைக்கப்பட வேண்டும் எ எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் பாலியல்சார் கலாசார சீர்கேடுகளைக் குறைத்துச் சிறந் மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவதற்கு எவ்வாறான கல்விக் கொள்கைகளை உருவாக்கமுடியும் என்பதற்கான ஆலோசனைகளைக் கூறி விளக்குக. (14 புள்ளிகள்)

07. பின்வருவன தொடர்பாகச் சுருக்கமாக விளக்குக.

அ. ஆரம்ப காலக் கல்வித் தத்துவங்களின் குறைபாடுகள்

ஆ. இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வியில் (Tertiary Education) காணப்படும் குறைபாடுகள்

இ. காள் மாக்ஸினதும் விவேகானந்தரினதும் தத்துவ வேறுபாடுகள்

ஈ. தற்காலத்துக்குப் பொருத்தமான கல்வி

(4 x 6 = 24 புள்ளிக